செய்தி வெளியீடு எண்:514 நாள்:03.11.2016

**செய்தி வெளியீடு**

**இளைஞர் நல இயக்குநரகம் & தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**

**சென்னை–84**

**இளைஞர் விழா**

எதிர்வரும் 12.01.2017 முதல் 16.01.2017 முடிய ஹரியானா மாநிலம் ரோர்டாக் நகரில் 21–வது தேசிய இளைஞர் விழா நடைபெற உள்ளது. இதில் 18 வகையான போட்டிகள் நடைபெற உள்ளன.

நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறப் பாட்டு, ஓரங்க நாடகம்,(ஆங்கிலம் அல்லது ஹிந்தி), கர்னாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம், பேச்சுப் போட்டி, ஹார்மோனியம், மிருதங்கம், புல்லாங்குழல், வீணை, சிதார், கிடார், தபேலா, மணிப்புரி நடனம், பரதநாட்டியம், குச்சுப்புடி, கதக் மற்றும் ஒடிஸி நடனங்களில் சிறந்து விளங்கும் 13 முதல் 25 வயதிற்குட்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடவர் மற்றும் மகளிர் 100 நபர்கள் தமிழ்நாட்டின் சார்பாக இவ்விழாவில் கலந்து கொள்ள அனுப்பி வைக்கப்பட உள்ளனர். விண்ணப்பப் படிவம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணைய தளமான www.sdat.tn.gov.in–ல் உள்ளது.

மேற்காணும் 18 பிரிவுகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ள தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **15.11.2016**–ந் தேதிக்குள் ywtnadu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியில் சமர்ப்பித்து போட்டியில் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**